சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

HMOP No.97/2019

பெயர். திரு.சிகாமணி நாள். 09.02.2026
த/பெ. கிருஷ்ணன்

**<u>எதிர் மனுதாரர் சா.2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் ஜானகி வழக்கிற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன். எதிர்மனுதாரரை எவ்வாறு தெரியும் என்றால், பழக்கத்தில் அவரைத் தெரியும். எதிர்மனுதாரரின் தந்தை என் ஊருக்கு வந்து என்னிடம் வழக்கு பிரச்சனை பற்றி கூறியுள்ளார். நான் எங்கள் ஊர் கிராம நாட்டாமை. கிராமத்தில் உள்ள வழக்குகளை சரி செய்வது தான் என் வேலை என்றால் சரிதான். அதற்கு எவ்வளவு தொகை வாங்குவேன் என்றால், நான் அவ்வாறு வாங்க மாட்டேன். இவ்வழக்கிற்கு சாட்சி சொல்ல எவ்வளவு தொகை வாங்கினேன் என்றால், நான் அவ்வாறு தொகை வாங்கவில்லை. முதல் விசாரணை நான் சொல்ல தயார் செய்தது தான். என்னுடைய முதல் விசாரணையில் எதிர்மனுதாரரும், மனுதாரரும் அவர்கள் ஊரில் உள்ள பம்பு செட்டில் தனிமையாக இருந்ததாக எவ்வாறு கூறினேன் என்றால், மனுதாரர் காவல் நிலையத்தில் கூறியதை வைத்துக் கூறுகிறேன். மற்ற விவரங்கள் தெரியாது என்றால் எதிர்மனுதாரர் என்னிடம் கூறியுள்ளார்.

2) எதிர்மனுதாரருக்கு கரு கலைப்பதற்கு நான் மருந்து ஏதும் வாங்கி கொடுக்கவில்லை. வேறென்ன தெரியும் என்றால், விசாரணை செய்ததில் மனுதாரர் கூறியவைத் தெரியும். மனுதாரரின் தகப்பனாரை காவல் நிலையம் அழைத்து வந்து அடித்தோம் என்றால் சரியல்ல. மனுதாரரின் தந்தையை ஏன் காவல் நிலையம் அழைத்து வந்தார்கள் என்றால், அவரது மகன் எங்கு உள்ளார் என கேட்பதற்காக அழைத்து வரப்பட்டார். மனுதாரரின் அக்கா மற்றும் மாமா ஆகியோர் என் உறவினர்கள். எதிர்மனுதாரரின் அக்கா மற்றும் மாமா ஆகியோர் எங்கள் ஊரில் உள்ளார்கள் என்றால் மனுதாரரின் அக்கா மற்றும் மாமா ஆகியோர் தான் உள்ளனர். ஊரில் உள்ள மக்களை வைத்து என் வழக்கறிஞர் மூலம் காவல் நிலையத்தில் புகார் அளித்து மனுதாரரை கட்டாயப்படுத்தி எதிர்மனுதாரருக்கு திருமணம் செய்து வைத்தோம் என்றால் மனுதாரர் தான் செய்த தவறை ஒப்புக் கொண்டு மனமுவந்து தான் திருமணம் செய்து கொண்டார். மனுதாரரும், எதிர்மனுதாரரும் 2016 ம் ஆண்டு முதல் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள். எதனால் பிரிந்து வாழ்கிறார்கள் என தெரியாது. எதிர்மனுதாரர் தன் தகப்பனார் வீட்டில் குடியிருந்து வருகிறார்.

3) இருவருக்கும் எங்கு வைத்து திருமணம் செய்தோம் என்றால் 21.11.2016 அன்று அச்சரபாக்கம் முருகர் கோயிலில் வைத்து திருமணம் செய்தோம். என் முதல் விசாரணையில் மனுதாரரின் தகப்பனாரை கொடுமை

செய்து அதன் பின்பு எதிர்மனுதாரருக்கு திருமணம் செய்து வைத்தோம் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் எதிர்மனுதாரர் தன் சகோதரி வீட்டில் குடியிருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் திருமணமான புதிதில் அவ்வாறு குடியிருந்தார். அவ்வாறு 3 நாள் மனுதாரர் இருந்து எங்கே சென்றார் என்றால் சென்னை சென்றார். மனுதாரர் தன் சகோதரியிடம், தன் மனைவி ஏன் காணவில்லை என்று கேட்ட விவரம் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் தன் சகோதரி வீட்டில் தான் இருந்தார். இருவரும் சேர்ந்து வாழ என்ன முயற்சி செய்தேன் என்றால் நான் ஏதும் செய்யவில்லை. இருவரையும் விசாரித்து காவல் நிலையத்தில் திருமணம் செய்து வைத்தேன். முதல் விசாரணையில் அவ்வாறு சொல்லியிருந்தால் தவறு.

4) மனுதாரரின் சகோதரி எங்கள் ஊரில் வசித்து வருகிறார். மனுதாரரிடம் நேற்று சென்று இவ்வழக்கில் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் இருப்பதற்கு ரூ.10,000/– தொகை கேட்டேன் என்றும், அதைத் தராத காரணத்தினால் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் பணத்தை பெற்றுக் கொண்டு பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு இதே வாடிக்கை என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.